# கோவிட்-19 [COVID-19] வழிகாட்டல்

நம் மாநிலத்தில் வேகமாக பரவி வரும் கோவிட் பாதிப்பு எண்ணிக்கையைக் குறைக்கவும், மருத்துவமனை மற்றும் மருத்துவ முறைகள் இந்த அதிகரிப்பினால் திணறாமல் இருக்கின்றன என்பதை உறுதி செய்வதற்கும், பொதுமக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க, மிகவும் கடினமான ஆனால் தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம்.

இது பல வணிகங்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் அறிவோம், எனவே ஆளுநரும் ஊழியர்களும் இந்த பாதிப்புகளை மட்டுப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்ந்து வருகின்றனர்.

- நவம்பர் 16, திங்கட்கிழமை நள்ளிரவு முதல் டிசம்பர் 14 திங்கட்கிழமை வரை, வாஷிங்டனில் உள்ள அனைத்து மாகாணங்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் பொருந்தும்.

**வேறு எந்த வகையிலும் குறிப்பிடாதபட்சத்தில், நவம்பர் 16 திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அனைத்து மாகாணங்களுக்கும் கட்டுப்பாடு மாற்றங்கள் அமலுக்கு வரும்.** செயல்பாடு பட்டியலிடப்படவில்லை என்றால், அது அதனுடைய தற்போதைய வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும். அனைத்து K-12/உயர் கல்வி, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் குழந்தை பராமரிப்பு ஆகியவற்றுக்கு புதிய கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன, மேலும் அவை தற்போதைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றும். இந்த கட்டுப்பாடுகள் நீதிமன்றங்களுக்கும் நீதித்துறை கிளை தொடர்பான நடவடிக்கைகளுக்கும் பொருந்தாது.

1. உங்கள் வீட்டு உறுப்பினர் அல்லாத வெளிப்புற நபர்களுடன், **உட்புற சமூக கூட்டங்கள்** பின்வருபவர்கள் தவிர்த்து தடைசெய்யப்பட்டுள்ளன (a) சமூக கூட்டத்திற்கு பதினான்கு (14) நாட்களுக்கு முன்பு தனிமைப்படுத்தபட்டிருத்தல்; அல்லது (b) சமூக கூட்டத்திற்கு ஏழு (7) நாட்களுக்கு முன்பு தனிமைப்படுத்தபட்டு, கூட்டம் நடப்பதற்கு 48-மணிநேரங்களுக்கு முன்பு கோவிட்-19 நெகட்டிவ் என்ற பரிசோதனை முடிவைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு வீட்டு உறுப்பினர் என்பது, ஒரே குடியிருப்பில் வசிக்கும் தனிநபர்கள் என வரையறுக்கப்படுகிறது.
2. **வெளிப்புற சமூக கூட்டங்கள்** உங்கள் வீட்டு உறுப்பினர் இல்லாத**,** ஐந்து (5) நபர்களுக்கு மட்டுமே என்று வரையறுக்கப்பட்டுள்ளன.

3. **உணவகங்கள் மற்றும் பார்களில்** உட்புற உணவருந்தும் சேவைகளுக்காக மூடப்பட்டுள்ளன. வெளிப்புற உணவருந்துதல் மற்றும் உணவை எடுத்துச் செல்லும் சேவை,  அனைத்து வெளிப்புற உணவருந்துதலும், வெளிப்புற உணவருந்தும் வழிகாட்டுதலின் படி இணங்கியிருந்தால், அனுமதிக்கப்படுகிறது. வெளிப்புறத்தில் உணவருந்தும் மேசை எண்ணிக்கை அதிகபட்சம் ஐந்து (5) நபர்களுக்கு மட்டுமே என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றியமைக்கப்பட்ட உணவகம் மற்றும் பார் கட்டுப்பாடுகள் நவம்பர் 18, 2020 புதன்கிழமை அதிகாலை 12:01 மணி முதல் நடைமுறைக்கு வருகின்றன.
4. உட்புற செயல்பாடுகளுக்கு **உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் ஜிம்கள்** மூடப்பட்டுள்ளன. வெளிப்புற உடற்பயிற்சி வகுப்புகள் அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் அவை மேலே பட்டியலிடப்பட்டுள்ள வெளிப்புற சமூக கூட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளன.
5. **பந்துவீச்சு [பௌலிங்] மையங்கள்** உட்புற சேவைக்காக மூடப்பட்டுள்ளன.
6. **இதர இடங்கள்:** அனைத்து சில்லறை வியாபார செயல்பாடுகள் மற்றும் வணிக கூட்டங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளன. தொலைவில் செய்ய முடியாத தொழில்முறைபயிற்சி மற்றும் சோதனை, அதனுடன் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை கிளை தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சந்திப்பு அறையிலும், உட்புற ஆக்கிரமிப்பு வரம்பில் 25 சதவிகிதம் அல்லது 100 நபர்கள், ஆகிய இரண்டில் எது குறைவானதோ அந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கு மட்டுமே அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது.
    - இதர இடங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன: மாநாடு / ஆலோசனை மையங்கள், ஒரு ஹோட்டலில் நியமிக்கப்பட்டுள்ள சந்திப்பு இடங்கள், நிகழ்ச்சிகள் நடத்தக்கூடிய இடங்கள், வெளிப்புற மைதானங்கள், விளையாட்டு அரங்கங்கள், இலாப நோக்கற்ற ஸ்தாபனம் அல்லது அதே போன்ற இடம்.
7. **திரையரங்குகள்** உட்புற சேவைக்காக மூடப்பட்டுள்ளன. டிரைவ்-இன் திரையரங்குகள் அனுமதிக்கப்படுகின்றன, மேலும் தற்போதைய டிரைவ்-இன் திரையரங்கு வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும்.

8. **அருங்காட்சியகங்கள்/உயிரியல் பூங்காக்கள்/ நீர்வாழ்காட்சியகங்கள்** உட்புற சேவைக்காக மூடப்பட்டுள்ளன.
9. **ரியல் எஸ்டேட்**: திறந்த வீடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன.
10. **திருமணம் மற்றும் இறுதி சடங்குகள்**: விழாக்களில் மொத்தம் 30 பேருக்கு மேல் அனுமதி இல்லை. உள்ளரங்கு வரவேற்பு, நிகழ்வுகள், அல்லது அதைப்போன்ற விழாக்களுடன் இணைந்த இது மாதிரியான கூட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.
11. **இன்-ஸ்டோர் சில்லறை கடைகள்** உட்புற ஆக்கிரமிப்பு வரம்பு எண்ணிக்கைகளில் 25 சதவீதமாக மட்டுப்படுத்தப்படும், மேலும் பொதுவான/இணைந்திருக்கும் இருக்கைகள் மற்றும் உணவகங்கள் உள்ளே அமர்ந்து உணவருந்தும் வசதிகளுக்காக மூடப்பட்டுள்ளன.
12. **மத ரீதியான சேவைகள்** உட்புற ஆக்கிரமிப்பு வரம்பில் 25 சதவிகிதம் அல்லது 200 நபர்கள், ஆகிய இரண்டில் எது குறைவானதோ அந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கு மட்டுமே அனுமதி என்று வரையறுக்கப்பட்டுள்ளது. பிரார்த்தனை கூட்ட உறுப்பினர்கள் / பங்கேற்பாளர்கள் எல்லா நேரங்களிலும் முகத்தை மூடும் கவசங்களை அணிய வேண்டும் மற்றும் கூட்டுப்பிரார்த்தனையில் பாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. சேவையின் போது, எந்த பாடகர் குழு, இசைக்குழு அல்லது அணியோ செயல்படக்கூடாது. தனிநபராக, பாடகர் அல்லது இசைக்கருவி வாசிப்பவர் செயல்பட அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், தனிப்பாடகர், கூடுதலாக ஒரு நபரை இணைத்துக் கொள்ளலாம். வெளிப்புற சேவைகள், கட்டமைப்பு அல்லது வசதிக்கு பொருந்தக்கூடிய, இங்கே காணப்படும் வெளிப்புற உணவு வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும்.
13. **தொழில்முறை சேவைகள்** ஊழியர்கள் முடிந்தவரை வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டும் என்றும் இயன்றவரை பொதுமக்களுக்கு அலுவலகங்களை மூட வேண்டும் என்றும் கட்டளையிட வேண்டும். திறந்திருக்கும் எந்த அலுவலகமும் உட்புற ஆக்கிரமிப்பு வரம்புகளில் 25 சதவீத அளவில் மட்டுமே இருக்க வேண்டும்.
14. **தனிப்பட்ட சேவைகள்** உட்புற ஆக்கிரமிப்பு வரம்புகளில் 25 சதவிகிதம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.
    - தனிப்பட்ட சேவை வழங்குநர்கள் பின்வருமாறு: காஸ்மடாலஜிஸ்ட், காஸ்மடாலஜி பரிசோதனை, சிகையலங்கார நிபுணர்கள், முடிதிருத்துபவர், எஸ்தெட்டீஷியன்கள், மாஸ்டர் எஸ்தெட்டீஷியன்கள், மேனிகியூரிஸ்ட், நெயில் சலூன் தொழிலாளர்கள், மின்னியல்

வல்லுநர்கள், நிரந்தர-ஒப்பனை கலைஞர்கள், டேனிங் நிலையங்கள் மற்றும் பச்சைகுத்தும் கலைஞர்கள்.

15. **நீண்ட-கால பராமரிப்பு வசதிகள்:** வெளிப்புற வருகைகள் அனுமதிக்கப்படுகின்றன. உட்புற வருகைகள் தடைசெய்யப்பட்டுள்ளன, ஆனால் ஒரு அத்தியாவசிய தேவைக்கான ஆதரவு அளிக்கும் நபர் அல்லது வாழ்வின்-இறுதி-கட்ட பராமரிப்பு ஆகியவற்றுக்கு விலக்குகள் அனுமதிக்கப்படுகின்றன. இந்த கட்டுப்பாடுகள் Proclamation 20-74 et seq, மற்றும் பல வசதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு பார்வையாளர்களையும் அனுமதிக்கும் அனைத்து பூர்வாங்க அளவுகோல்களும் உட்பட Proclamations 20-66 et seq மற்றும் 20-74 et seq பிரகடனங்களின் மற்ற அனைத்து விதிகளும் நடைமுறையில் இருக்கின்றன.
16. **இளைஞர் மற்றும் பெரியவர்களுக்கான விளையாட்டுகள்**: உட்புற செயல்பாடுகள், அனைத்து போட்டிகளும், விளையாட்டுகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. வெளிப்புற நடவடிக்கைகள் என்பது உள்-குழு நடைமுறைகளுக்கு மட்டுமே, மற்றும் அனைத்து குழு பயிற்சியாளர்களும், தன்னார்வலர்களும், விளையாட்டு வீரர்களும், எல்லா நேரங்களிலும் முகக்கவசங்கள் அணிந்திருக்க வேண்டும்.